# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண்.46/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 08.04.2021**

**பெயர் - கோவிந்தசாமி**

**த/பெ - மல்லையா**

**வயது -**

**சாட்சி - PW2**

**விசாரணை தொடங்கும் நேரம் -12.00Pm**

**குறுக்கு விசாரணை -**

நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. லோகு எனது தம்பியின் மகன். லோகு இந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் என் தம்பி சொல்லி தயார் செய்யப்பட்டது. வழி பாதையின் நீள, அகலம் எனக்கு சரியாக நியாபகம் இல்லை.